DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Special Sessions Case No. 3-2024**

**Deposition of Witness for Prosecution : P.W. 15**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பசுபதி | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 17.06.2025

<u>முதல் விசாரணை</u>

நான் தற்சமயம் தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.07.2023 ந் தேதி நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது அன்றைய தினம் 12.00 மணிக்கு கருப்பம்புலம் மேலக்காடு, அம்பேத்கர் நகரை சேர்ந்த ரமேஷ் மனைவி லலிதா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று வேதாரண்யம் அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண் 13/2023 சட்டப்பரிவு 376(2)(l) IPC மற்றும் 3(1)(w)(i), 3(1)(w)(ii) r/w 3(2)(v) SC/ST (POA) Amendment ACT 2015 ன்படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையினை புகாருடன் இணைத்து நாகப்பட்டினம் மாவட்ட முதன்னை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

புகாரினை கொடுக்க லலிதா அவர்கள் வந்திருந்தார் அவருடன் ஊர்காரர்கள் வந்திருந்தார் ஆனால் யார் யார் வந்திருந்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. பாதிக்கப்பட்ட பெண் வரவில்லை என்றால் சரிதான். அவர் மனநிலை சரியில்லாதவர் என்பதால் தான் லலிதா

அவர்களிடம் இருந்து புகார் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். உண்மையிலேயே அவர் மனநிலை சரியில்லாதவர் அவர் புகார் அளிக்க இயலாதவர் என்ற விபரத்தை ஆவணங்கள் மூலம் சரிபார்த்தேன் என்றால் சரிதான். புகாரினை எனது மகள் மனநிலை சரியில்லாதவர் என குறிப்பிட்டிருந்ததால் புகாரினை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து மாவட்ட கண்காணிப்பாளருக்கு துரித விசாரணைக்கு அனுப்பி வைத்தேன். முதல் தகவல் அறிக்கை 22.07.2023ந் தேதி இரவு 12.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 21.07.2023ந் தேதி புகாரினை துணை கண்காணிப்பாளர் பதிவு செய்தார் என்றால் சரியல்ல. இந்த புகாரினை எழுத்து பூர்வமாக தான் கொடுத்தார். அந்த புகார் எங்கு, யாரால் எழுதப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த விபரத்தை நான் கேட்டு தெரிந்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். அந்த புகாரில் லலிதா கைரேகை தான் வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த புகாரை புகார்தாரரிடம் படித்து காட்டி சரிதானா என்று கேட்டேன் என்றால் சரியல்ல. 21.07.2023ந் தேதியே இவ்வழக்கிற்கான ஜோடனை தயாரிக்க ஆரம்பித்துவிட்டோம் என்றும் மறுநாள் இதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை தயார் செய்தோம் என்றால் சரியல்ல. விபரங்களை சரிபார்க்காமல் விசாரணை எதுவும் செய்யாமலும் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.